பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 05 | வியாழக்கிழமை | 18.04.2024 | அதிர்வு 261

## மலையக மக்கள் சஜித்தின் பக்கமே

### அடித்துக் கூறுகின்றார் டிலான்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் 06

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் பதவியில் நீடிக்க ரணில் வியூகமா?

## பலருக்கும் இப்படிச் சந்தேகம் என்கிறார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாமல் தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்படுகின்றவா என்ற சந்தேகம் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடத்தில் ஏற்பட்டிருக்கின்றது."

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். 06



# அநுரவின் ஆட்சியில் புதிய அரசமைப்பு உறுதி

## மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என நளிந்த தெரிவிப்பு



மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் 06

# 12 வயது சிறுவன் வெட்டிக்கொலை!

## தந்தை படுகாயம்




இரு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் தந்தையை வெட்டிக் காயப்படுத்திய கும்பல், மகனை வெட்டிக் கொலை செய்துள்ளது.

இந்தக் கொடூர சம்பவம் அம்பாந்தோட்டை – பெலியத்தை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. 06

# சு.கவை ஐ.தே.கவுடன் இணைக்கச் சிலர் சதி

## மித்திரபால எம்.பி. குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குச் சிலர் சூழ்ச்சி செய்தாலும் அக்கட்சி ஆதரவாளர்கள் இடமளிக்கமாட்டார்கள் என்று சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்திரபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 06






முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய பத்துக் கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான ரேஞ்ச் ரோவர் வாகனத்தை இலங்கையின் தொலைக்காட்சி பிரபலமும் அழகிப்போட்டிப் பாவையும் மொடலழகியுமான பியூமி ஹன்சமாலி இப்போது பயன்படுத்துவது குறித்தும், அத்தகைய பெறுமதியான வாகனத்தை அவர் எப்படி பெற்றுக் கொண்டார் என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

– இவ்வாறு சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவில் 'எங்கள் நாடு' அமைப்பின் தலைவர் சஞ்சய் மஹவத்த முறையீடு செய்திருக்கிறார்.

இந்த மொடல் அழகி இப்போது 06




# சுட்டெரிக்கும் வெயிலின் கொடூரத்துக்கு மத்தியிலும் கல்முனையில் தொடர்கின்றது மக்களின் போராட்டம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகம் மீதான தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 24 ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகின்றது.

சுட்டெரிக்கும் வெயிலின் கொடூரத்திலும் நிழல் கூடாரம் அமைக்கத் தடை விதித்த நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத் தீர்வுக்கான தமது கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் தம்மைக் காக்கப் பனை ஓலைகளைத் தாங்கி போராடி வருகின்றனர்.

பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளைத் தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்றுகூடி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும், அத்துமீறலுக்குமான குறித்த எதிர்ப்புப் போராட்டம், குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக உள்ள வீதியின் இரு மருங்கிலும் இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், கடந்த காலங்களில் உதவி அரச அதிபர் பிரிவாகச் செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 ஆம் ஆண்டுகளில் தனியான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, 1993 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகின்றது எனவும் ஊடகங்களிடம் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாகப் பொதுமக்களாகிய தாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர் என்று கூறியுள்ளனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும் கண்டித்துள்ள மக்கள், திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், அரசு இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றும், தமக்கான பதில் கிடைக்கும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ்பி பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் பல அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# அதிக விலைக்கு எரிவாயு கொள்வனவு: ஆணைக்குழுவின் விசாரணை ஆரம்பம்

அதிக விலைக்கு எரிவாயுவைக் கொள்வனவு செய்ததன் மூலம் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறைந்த விலைக்கு எரிவாயு வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு கோரலை இரத்துச் செய்து அதிக விலைக்கு எரிவாயுவைக் கொள்வனவு செய்ததன் மூலம் அரசுக்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கொள்வனவின் மூலமாக அரசுக்குச் சுமார் 114 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும், இது தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனவும் கூறப்படுகின்றது.

சியாம் காஸ் டிரேடிங் என்ற நிறுவனம் குறைந்த விலையில் எரிவாயுவை வழங்குவதற்குச் சமர்ப்பித்த விலைமனு கோரலுக்கு கொள்முதல் மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்நிலையில், அந்த விலைமனு கோரல் இரத்துச் செய்யப்பட்டு, ஊழல் மற்றும் கழிவுகளுக்கு எதிரான குடிமக்கள் படை விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஓமான் வர்த்தக நிறுவனத்திடம் இருந்து அதிக விலைக்கு எரிவாயு வாங்கியதன் மூலம் விலைமனு கோரல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று சிவில் அமைப்புகளின் சங்கத்தின் தலைவர் கமந்த துஷார செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

# மனைவியைக் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்த கணவன்

## மாத்தளையில் கொடூரம்



தனது மனைவியைக் கணவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் மாத்தளை, எல்கடுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.


வீட்டில் இடம்பெற்ற விருந்து பசாரத்தின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் உயிரிழந்த பெண்ணின் கணவனை, ஊர் மக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# பண்டிதர் கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகுக்குப் பேரிழப்பு!

## அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இரங்கல்



பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகுக்குப் பேரிழப்பாகும் என அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் (யாழ்ப்பாணம்) செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“நூற்றாண்டு கடந்த வரலாற்றைக் கொண்டதும், ஈழத்தின் பழம்பெரும் அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டதும், பல பண்டிதர்களை இத்தமிழுலகுக்கு அளித்ததுமான ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைக் கடந்த 40 வருடங்களாகப் போற்றிப் பணியாற்றிய பெருந்தமிழ்மகனே பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்.

தமிழ் மூச்சே உயிர்மூச்சு என்ற அசையாத நம்பிக்கையோடு சங்கத்தை திறம்பட வழிநடத்தி பண்டிதர் மரபை நம் மண்ணுக்கு அளித்த பெருமகனார்.

தமிழோடு சைவத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக சைவப்புலவர்களை இம்மண்ணில் பிரசவிக்க வேண்டும் எனும் பேரவாவின் காரணமாக மரபு வழி குரு மரபில் இலக்கணத்தைத் தோற்றுவித்த நாவலர் பெருமான் உருவாக்கிய நாவலர் மகா வித்தியாலயத்தில் மூன்று தசாப்தத்துக்கு மேலாக இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலக்கண பாடத்தை இலகுபடுத்தி மாக்கி கற்பித்த நல்லாசான் ஆவார்.

தொல்காப்பியத்தை விருப்புடனும் அனைவர் மனதிலும் பதிந்து விருப்புடன் கற்க இலகுபடுத்தி கற்பித்த பெருமகனார்.

காப்பியதாசன் என்று போற்றப்படும் தொல்காப்பிய விற்பன்னன். தொல்காப்பியத்தை கற்பிப்பதில் இவருக்கு இணையாக யாரையும் ஒப்பிட இயலாத பெருந்தகை.

தொல்காப்பியத்தோடு நன்னூல், நன்னூல் கண்டிகையுரை ஆகியவற்றையும் விருப்புடன் கற்பித்து இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டத்தின் ஒரு பாடத்துக்குரிய இலக்கணப் பாடத்தை மாணவர்கள் கற்று சித்தியடையச் செய்தவர்.

நீண்டகாலமாக சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்குழுவில் இலக்கண வினாத்தாள் தயாரிப்பாளராக, மதிப்பீட்டாளராக நடுநிலையுடன் இரகசியத் தன்மையுடன் பணியாற்றி, சைவப் புலவர் சங்கத்தின் மூத்த சைவப்புலவர்களால் நன்மதிப்பைப் பெற்றவர். குறுகிய சில வருடங்களாக தன் உடல் நிலை காரணமாக இப்பணியில் இருந்து அவர் விலகியிருந்தார்.

சைவத்தமிழ் மரபில் தமிழ்ப் பண்டிதர்களையும் சைவப் புலவர்களையும் உருவாக்கிய பெருமகனார் பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் தமது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

பிறந்தவர் மண்ணில் மறைவது இயல்பு என்ற சிந்தனைக் கமைய காலம் தன் கடமையை நிறைவேற்றியுள்ளது. உயர் தமிழ் மகனாரின் ஆத்மா பார்வதி சமேத பரமேஸ்வரனின் பாதார விந்தங்களை அடைந்து பேரின்பப் பெரு வாழ்வு வாழப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டிதமணி ஐயாவுக்கு வெறும் இரங்கல்களையோ அனுதாபங்களையோ தெரிவித்துவிட்டு கடந்துவிடும் இழப்பல்ல இந்த இழப்பு. அசராத தமிழ்ப் பாண்டித்தியத்தின் ஒரு தலைமுறையின் இழப்பு. கடந்து வந்த பல தசாப்தங்களில் புலமையையும் தமிழ் மரபுக் கல்வியையும் கடத்திவந்த, காவி வந்த, தொடரின் ஒரு பெரும் அத்தியாயம் இவர்.

ஈழத்து மரபுத்தமிழ் கல்வி வரலாற்றில் அழித்துவிட முடியாத எங்கள் பண்டிதர் ஐயாவுக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சார்பில் அஞ்சலிகளைச் செலுத்தி நிற்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.” - என்றுள்ளது.

# கைதான வீதியோரக் கடைக்காரருக்குப் பிணை




கொழும்பில் உணவின் விலையைக் கேட்ட பின் அதனை வாங்க மறுத்ததால், வெளிநாட்டு யூடியுபர் ஒருவரை விரட்டிய சம்பவம் தொடர்பில் கைதான வர்த்தகர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வாழைத்தோட்டம் பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து, கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

இதன்போது, சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபா ரொக்கம் மற்றும் ரூ. 10 இலட்சம் கொண்ட சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிட்டுள்ளார்.

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்கடை பிரதேசத்தில் உணவு வாங்க வந்த வெளிநாட்டவர் ஒருவர் சாப்பாட்டின் விலையைக் கேட்ட பின் அது அதிகம் எனும் தோரணையில் செயற்பட்டதைத் தொடர்ந்து, உணவை வாங்கவில்லையாயின் அங்கிருந்து வெளியேறுமாறு கடையின் உரிமையாளர் எனத் தெரிவிக்கப்படும் சந்தேகநபர், குறித்த வெளிநாட்டவரை பயமுறுத்தும் வகையில் மிரட்டினார் இரு தெரிவித்தமை தொடர்பில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வெளிநாட்டவர் மீனுடன் கொத்து ரொட்டி ஒன்றின் விலையைக் கேட்டபோது, அதற்கு ரூ. 1,900 எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து, அதனைக் குறித்த வெளிநாட்டவர் வாங்க மறுத்த நிலையில், உணவை வாங்கவில்லையாயின் அங்கிருந்து வெளியேறுமாறு கடை உரிமையாளர் அச்சுறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு 12 பகுதியை வசிப்பிடமாக கொண்ட 51 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.


# திருமணமாகி ஒரு மாதமான நிலையில் கணவனை காணவில்லை எனப் புகார்

## நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கே.வசந்தன்)

திருமணமாகி ஒரு மாதமான நிலையில் கணவனைக் காணவில்லை என மனைவி நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, வேப்பங்குளம், மெதடிஸ்ட் தேவாலய வீதியில் தற்காலிகமாக வசித்து வந்த இளம் தம்பதிகளில் கணவனை கடந்த 12.04.2024 அன்று முதல் காணவில்லை என மனைவி பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.





பதிவு திருமணம் செய்து ஒரு மாத காலமான நிலையில் குறித்த இளம் குடும்பத்தினர் தற்காலிகமாக மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வந்த நிலையில் கடந்த 12.04.2023 அன்று மனைவியை அவரது பணித்தளத்தில் இறக்கிவிட்டு, தான் தனது பணிக்கு செல்வதாகக் கூறிவிட்டு சென்றவர் மீண்டும் வரவில்லை என மனைவி தெரிவித்துள்ளார்.

25 வயதுடைய வில்வராசா ரக்சன் என்பவரே காணாமல் போனவராவார். குறித்த நபரை அடையாளம் காண்பவர்கள் 0741822912 குறித்த தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்குமாறு மனைவி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.




# வடக்கு மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள்

## ஆளுநரிடம் நேற்றுக் கையளிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான பார்வை ஆய்வு அட்டைகள் (Vision charts) ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பார்வைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயல்திட்டத்தின் ஒரு கட்டமாக பார்வை ஆய்வு அட்டைகளை (Vision charts) உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில், ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் பார்வை ஆய்வு அட்டைகள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவனின் வழிநடத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த விசேட செயல்திட்டத்திற்கான பார்வை ஆய்வு அட்டைகளை, Vision care நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் ஆளுநரிடம் கையளித்தனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமானது.

அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள், வலயக் கல்வி பணிமனைகளூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். பாடசாலைகளில் மாணவர்களுக்கான பார்வை தொடர்பில் ஆராய்வதற்கான பார்வை ஆய்வு அட்டைகளே (ஏளைழைெ உயசவள) இன்று கையளிக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆளுநரின் செயலகத்தின் ஊடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டு, அங்கிருந்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதி சொகுசுக் குடியிருப்பில் வசிக்கின்றார். மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை முறையை வாழ்கின்றார். வெறுமனே அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் ஹன்சமாலிக்கு இவ்வளவு வருமானம் எங்கிருந்து வந்தது என்று அவர் கேள்வி எழுப்பி இருக்கின்றார்.

பதவி விலகியமையை அடுத்து பொது வாழ்வில் இருந்து ஒதுங்கி, அமைதியாக இருக்கும் கோட்டாபயவை சுரண்டிச் சந்திக்கு இழுக்கும் வேலை தொடங்கி விட்டதாகவே தோன்றுகின்றது.

\+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் மீண்டும் தள்ளிப் போய் இருக்கின்றது எனத் தெரிகின்றது.

இது முதலில், வரும் சனிக்கிழமை 20ஆம் திகதிக்குத் திட்டமிடப்பட்டது. பின்னர் ஒரு நாள் முற்போடப்பட்டு 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை – அதாவது நாளை – நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் நாளை அன்னை பூபதி நினைவு தினம் என்று சுட்டிக் காட்டப்பட்டமையால் வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு (பௌர்ணமி தினத்துக்கு) அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்று வவுனியாவில் இக்கூட்டம் நடைபெறும்.

அடுத்த நாள் தமிழரசுக் கட்சியின் வழக்குத் தவணை திருகோணமலை நீதிமன்றத்தில். வவுனியாவில் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும் கட்சியின் தலைவர்கள், பிரமுகர்கள் அங்கிருந்து அடுத்த நாள் திருகோணமலையில் நடைபெறும் வழக்குக்குச் செல்வர் என்று எதிர்பார்க்கலாம்.

வவுனியா கூட்டத்தில் இந்த வழக்கு விடயம் மற்றும் வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதா என்ற விவகாரம் போன்றன குறித்து விரிவாகப் பேசப்பட்டு, முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

\+ + +

மலையகத்தில் இருந்து ஒரு புகைச்சல் கிளம்பி இருக்கின்றது. மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பத்தாயிரம் வீடுகளை அமைத்து வழங்க இந்தியா முன்வைத்திருக்கின்றது. அதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் இ.தொ.கா. தரப்பில் இருந்து முறையற்ற அழுத்தம் வந்திருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் தொழிற்சங்க சார்பு நோக்கு இடம்பெறவே கூடாது என்பது இந்தியாவினதும், இலங்கை அரசினதும் உறுதியான நிலைப்பாடாக இருந்த போதிலும், ஏதோ விதத்தில் தொழிற்சங்க அழுத்தம் புகுந்து விட்டதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டங்களை விட்டு வெளியேறிய நபர்கள், ஏற்கனவே வீடுகள் உள்ளவர்கள், தோட்டங்களில் வசித்தாலும் பிற தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர் போன்றோர் இந்த மானியத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படக்கூடாது என்பது விதிமுறை. ஆனால் அத்தகையோருக்கும் வீட்டுத்திட்டங்களை ஒதுக்கும்படி தாங்கள் வற்புறுத்தப்படுகின்றனர் என சம்பந்தப்பட்ட தரப்புகள் கூறுகின்றன.

எது, எப்படியோ யுத்தம் முடிவடைந்த கட்டத்தில் வடக்குக் கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்து வழங்கும் திட்டத்திற்கு இந்தியா முன் வந்தது. அதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு உரிய விதிமுறைகள், புள்ளி இடுதல் நடைமுறை எல்லாவற்றையும் வகுத்து, மிகுந்த அவதானிப்போடு திட்டத்தை முன்னெடுத்தது யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம். நூற்றுக்கு 99 வீதம் அந்தப் பணியை நேர்மையாகவும், ஒழுங்கு முறையாகவும், ஊழலுக்கோ, முறைகேட்டுக்கோ இடமளிக்காமலும் செய்து முடிப்பதில் இந்தியத் துணைத் தூதரகத்தின் பங்கு பணி சிறப்பாக இருந்தது என்பதை இங்கு விதந்து குறிப்பிட வேண்டும்.

அந்தப் பெருமையை மத்திய மலைநாட்டில் தூதரகம் கைவிடாமல் பார்த்துக் கொள்வது அதன் கடப்பாடாகும்.

## ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையின் அரசியல் சாசனத்தின் படி எதிர்வரும் செப்டெம்பர், ஒக்டோபர் மாதம் அளவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும். இலங்கையின் தேர்தல் ஆணையகமும் புதிய தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும், அதற்கான திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கூறி வருகின்றது.

இது இப்படி இருக்க அரசியல்வாதிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற அச்சம் தொற்றிக்கொண்டுள்ளது. கடந்த காலங்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு தள்ளிவைத்திருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலில் புதியதேர்தல்முறையொன்றைக்கொண்டு வருகின்றோம் என்று காரணம் கூறப்பட்டு காலவரையறையின்றி அந்தத் தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பன அரசின் ஏஜன்டுகள் அல்லது அரசால் நியமிகப்பட்டவர்கள் எனப்படுவோரின் அதிகாரத்தின் கீழ்க் காணப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத்திலிருந்து மாகாண சபை மற்றும் நாடாளுமன்றம் வரையும் அரசின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. அரசு தான் நினைத்த விடயங்களைச் செய்கின்ற சூழ்நிலைதான் இன்று ஏற்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சியோ அல்லது மக்களின் ஜனநாயக உரிமைகளோ மதிக்கப்படவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் உருவாக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. ஆயினும், அந்தத் தேர்தல் நடைபெறுமா என்ற ஐயம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. எனவே, இன்னுமோர் அரகலய போராட்டம் தேவையா? அல்லது நாடு முழுவதும் மக்கள் எழுச்சியொன்று ஏற்பட வேண்டுமா? போன்ற கேள்விகளும் எழுந்து நிற்கின்றன.

அரசின் இவ்வாறான போக்குகள் மீண்டும் பாரிய எழுச்சியொன்றுக்கு வழி வகுக்கலாம். இவ்வாறான எழுச்சிகள் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள் என்பவை பின்தள்ளிப் போவதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தும்.

ஜனநாயகத்தை மதித்து மக்களின் வாக்குரிமைகளை மதித்து ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிடப்படும் திகதியில் குறிப்பிடப்படும் காலத்தில் நடத்தப்பட வேண்டும் என ஒட்டுமொத்த மக்களும் விரும்புகின்றனர். தேர்தல்களைக் காலவரையறையின்றி ஒத்திவைப்பதை விடுத்து மக்களை மதித்து தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்." – என்றார்.

## மலையக மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரை அவரால் மலையகப் பெருந்தோட்ட மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், மலையகப் பெருந்தோட்ட மக்கள் சஜித் பக்கமே நிற்கின்றனர் என்றும் ஊடகங்களிடம் அவர் கூறினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மொட்டுச் சின்னத்தில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற டிரான் பெரேரா, அரசியல் நெருக்கடியின்போது டலஸ் அழகப்பெரும பக்கம் நின்றார். தற்போது அவர், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அநுரவின் ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் கூறியதாவது:-

"அரசமைப்பு என்பதை பலவந்தமாகத் திணிக்க முடியாது. அது தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்துரையாடல் மற்றும் மக்களின் ஆதரவு அவசியம். ஆனால், இலங்கையில் சோல்பரி யாப்பு, 72 குடியரசு யாப்பு மற்றும் 78 இல் புதிய அரசமைப்பு என்பன மக்களிடம் முறையாகக் கலந்துரையாடப்படாமல் கொண்டுவரப்பட்டவையாகும்.

தென்னாபிரிக்காவில் அரசமைப்பு முன்வைக்கப்பட்டபோது மக்களிடம் பரந்துபட்டளவில் கலந்துரையாடப்பட்டது. மன்னர் ஆட்சி நடைபெற்ற நேபாளத்தில் கூட மக்கள் விருப்பத்துக்கமையவே புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. எனவே, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது நாடாளுமன்ற ஆட்சிக் காலத்துக்குள் மக்கள் மயப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி, நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைப் பகிரும் யோசனையும் உள்ளது." – என்றார்.

## 12 வயது சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரம் 7 இல் கல்வி 12 வயதுடைய சிறுவனே மேற்படி சம்பவத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

38 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் பெலியத்தை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணித் தகராறு காரணமாக இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைச் சந்தேகநபர்கள் பிரதேசத்தில் இருந்து தப்பியோடியுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சு.கவை ஐ.தே.கவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இது சவால் மிகு வருடமாகும். தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனவே, சூழ்ச்சிகளுக்கு அடிபணியாது கட்சியை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

சுதந்திரக் கட்சியை யானை வாலுடன் முடிச்சுப் போடுவதற்குச் சிற்சில குழுக்கள் முற்பட்டாலும் அக்கட்சி ஆதரவாளர்கள் அதற்கு இடமளிக்கமாட்டார்கள்." – என்றார்.



# 21 இலங்கைப் பணியாளர்களுடன் கப்பல் ஓமன் வளைகுடாவில் கவிழ்ந்து விபத்து!

ஓமன் வளைகுடாவில் சீரற்ற கால– நிலையால் ஏற்பட்ட கடும் புயல் காரண– மாக, இலங்கையர்கள் பயணித்த கப்பலொன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

அந்த கப்பலில் பயணித்த, 21 இலங்கைப் பணியாளர்களை ஈரா னிய மீட்புக் குழுவினர் காப்பாற்றி யுள்ளனர் என அந்த நாட்டின் அரச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

குக் தீவுகளின் கொடியுடன் எண் ணெய் ஏற்றிச் சென்ற மேற்படி கப்பல், தெற்கு நகரமான ஜாஸ்கில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலை வில் கவிழ்ந்துள்ளது.

கப்பலில் பயணித்தவர்களை மீட் பதற்கு அந்தப் பகுதிக்கு மீட்புக் குழு வினர் அனுப்பப்பட்ட நிலையில், 21 பணியாளர்கள் காப்பாற்றப்பட்டுள் ளனர் என ஜாஸ்க் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் நிர்வாகத்தின் இயக்குனர் மொஹமட் அமீன் அமானி தெரிவித்துள்ளார்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1,700 வேதனம் வழங்கக் கோரி கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டம்



பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு நாளாந்த அடிப்படை சம்பள மாக 1,700 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி, இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸின் சார்பில் கொழும் பில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம் பள உயர்வு பேச்சுவார்த்தையை முத லாளிமார் சம்மேளனம் புறக்கணித் தமை மற்றும் சம்பள உயர்வு வழங் காமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸின் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

கொழும்பு – கோட்டை ரயில் நிலை யத்துக்கு முன்பாக நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் ஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளவர் கள் கறுப்புப்பட்டி அணிந்து கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க - டுபாய் விமான சேவை இரத்து

கட்டுநாயக்க விமான நிலையத் திலிருந்து நேற்று மாலை 6.25 மணிக்கு டுபாய்க்கு புறப்படவிருந்த மற்றும் அங்கி ருந்து இலங்கைக்கு பயணிக்கவிருந்த விமான சேவைகளை இரத்துச் செய்துள் ளன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இதனை அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தற் போது நிலவும் மோசமான வானிலையே இதற்குக் காரணம் எனக் குறிப்பிடப்படு கிறது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சு.கவுக்கு சோதனை நாள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரை இன்றைய தினம் அதன் எதிர்காலம் தொடர்பில் தீர்மானகரமான நாளாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன தொடர்வதற்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, அவருக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றிருந்தார் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க.

சந்திரிகாவின் மனு ஒரு தலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டு, தடை உத்தரவு வழங்கப்பட்ட நிலையில், இன்றைய தினம் தடை உத்தரவினால் பாதிக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேன தரப்பினர் சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் முதல் தடவையாக இவ்வழக்கையொட்டி முன்னிலையாக உள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பில் இறுதியான முடிவு எதுவும் இன்றைய தினமே நீதிமன்றம் எடுப்பதற்கான வாய்ப்புகள், சாத்தியக்கூறுகள் ரொம்பவும் குறைவு. ஆயினும் எதிராளிகளான மைத்திரிபால சிறிசேன தரப்பின் வாதங்களை அல்லது பூர்வாங்க ஆட்சேபனைகளை செவிமடுத்து, கவனத்தில் எடுத்த பின்னரும் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிக்கவும், இடைக்காலத் தடையை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கவும், நீதிமன்றம் முடிவு செய்யுமானால் கட்சியில் மைத்திரிபால சிறிசேனவின் பிடி சந்தேகத்துக்குரியதாகும் என்பதுதான் நிலைமை.

அத்தகைய நிலையில் கட்சியின் அதிகாரம் - செல்வாக்கு - கட்டுப்பாடு - யார் கையில் என்ற குழப்பமும் சர்ச்சையும் கூட நீடிக்கும்.

அதற்கான முடிவோ அல்லது அத்தகைய விடயத்தில் முடிவு செய்வதற்கான வழிகாட்டுதல்களோ மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து இன்று வருவதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை என்பதுதான் சட்ட நிலைவரம் ஆகும்.

எனவே, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு விடுத்துள்ள தடை இன்றிலிருந்து மேலும் நீடிக்கப்படுமானால் சு.கவின் உள்கட்சிக் குழப்பம் இன்னும் தீவிரமடைந்து, மோசமான கட்டத்தை அடைவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே கட்சிக்கும் பதவி வழி தலைவர் என்ற கட்சியின் யாப்பு விதியைக் காட்டியே 2015 இல் தாம் ஜனாதிபதியானதும் சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை அதுவரை ஜனாதிபதியாக இருந்து பதவி இறங்கிய மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பிடுங்கி எடுத்தார் மைத்திரிபால சிறிசேன.

கட்சியின் உறுப்பினர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதியாயின் அவருக்குக் கட்சியின் போஷகர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கட்சி யாப்பின் விதப்புரையை காட்டியே மைத்திரிபால சிறிசேனவின் தலைமைக்கு இடைக்கால தடை விதிக்கும் உத்தரவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பெற்றார் என்று கூறப்படுகிறது.

இந்த யாப்பு வாசகங்கள் இன்று நீதிமன்றத்தில் பிய்த்து உதறி அலசப்படும். இருதரப்பு சட்டத்தரணிகளும் கட்சியின் யாப்பு வாசகங்களை தத்தமது நிலைப்பாடுகளுக்கு வசதியாக வியாக்கியானம் செய்வதற்கு குத்திமுறிவர் என்று எதிர்பார்க்கலாம்.

சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை - கட்டுப்பாட்டை - தக்க வைப்பதற்கு மைத்திரி அணியும், கைப்பற்றுவதற்கு சந்திரிகா அணியும் முன்னெடுத்துள்ள பலப்பரீட்சையின் முதல் கட்டம் இன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் களம் காண்கின்றது.

இன்றைய நீதிமன்ற அமர்வில் காத்திரமான முடிவுகள் ஏதும் எட்டப்படாமல் முரண்பாட்டு நிலை - முறுகல் நிலைமை - நீடிக்குமானால், நீதிமன்றத்துக்கு வெளியிலும் கட்சியின் தலைமையகத்திலும் பிற இடங்களிலும் இந்த இழுபறி பெரும் அரசியல் மோதலாக நீடிக்கும்.

வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலையும், அதன் பின்னரான நாடாளுமன்றத் தேர்தலையும் சுதந்திரக் கட்சி ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக எதிர் கொள்வதற்கான வாய்ப்புகள் கூட அதனால் குழம்பிப் போகும்.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் - சந்திரிகாவும் மைத்திரியும் - தங்களுக்குள் மோதி, பழமை மிக்க தங்களின் கட்சியை நடுவீதிக்குக் கொண்டு வந்துள்ளனர் என்பதுதான் இதில் உள்ள வேதனையான விடயமாகும்.



## இந்திய மக்களவை தேர்தல்:

# பிரசாரங்களில் பேசுபொருளான கச்சதீவு, மீனவர் பிரச்சினைகள்

இந்தியாவின் 18ஆவது மக்களவை தேர்தல் நாளை ஆரம்பமாகவுள்ளது.

7 கட்டங்களாக நடைபெறும் தேர்தல் எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஜுன் 4ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகவுள்ளன.

இந்நிலையில், நேற்று மாலை 6 மணியுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்ததால், அனைத்து கட்சிகளும் பரப்பரப்பாக நேற்று பிரசாரங்களை முன்னெடுத்தன.

கச்சதீவு விவகாரம் மற்றும் தமிழக மீனவர்கள் குறித்து இம்முறை பிரசாரங்களில் அதிகமாக பேசப்பட்டது.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் நலனுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் செயற்படுத்தியுள்ள திட்டங்களை பட்டியலிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதில் மீனவர்களுக்கான வாக்குறுதியை பிரதமர் நரேந்திர மோடி நிறைவேற்றவில்லை என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாம் பிரதமரானால் தமிழக மீனவர்களை பாதுகாப்பதாக 2014 ஆம் ஆண்டில் ராமநாதபுரத்தில் மோடி உறுதிபூண்ட போதிலும், 10 ஆண்டுகள் கடந்த விட்ட நிலையில், மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என தி.மு.கவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோடியின் ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் முன்பை விட அதிகமாக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழக மீனவர்களின் உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மீனவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்த போதிலும் இலங்கையைக் கண்டித்து பிரதமர் நரேந்திர மோடி ஒரு வார்த்தையேனும் பேசவில்லை எனவும், தமிழக மீனவர்களுக்காக சிறு துரும்பையும் பிரதமர் மோடி அசைக்கவில்லை எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த காங்கிரஸ் ஆட்சியுடன் ஒப்பிடுகையில், தமது ஆட்சியின் கீழ் இந்திய மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதில்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கம் இலங்கையுடன் சிறந்த இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொண்டமையின் காரணமாகவே இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தடுக்க முடிந்துள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

கச்சதீவு பிரச்சினையை காங்கிரஸ் அரசாங்கமே உருவாக்கியதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

# அயோத்தி ராமர் நெற்றியில் திலகம் போல் சூரியக் கதிர்



ஸ்ரீராம நவமி தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ராமரின் நெற்றியில் திலகமிட்டது போல் சூரியக் கதிர் விழவைக்கப்பட்டது.

இது பக்தர்களை பரவசப்படுத்தியது.

இந்தியாவின் உத்தரபிரதேசம், அயோத்தியில் பாலராமர் சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், ராமர் கோவிலில் ராமநவமி விழா நடந்து வருகிறது. விழாவின் 9 ஆவது நாளான நேற்று ராம் லல்லாவின் சூரிய அபிஷேக மகோத்சவம் கோலாகலமாக நடைபெற்றது.

நேற்று பகல் 12.16 மணிக்கு கோவில் கருவறையில் கம்பீரமாக வீற்றிருக்கும் பால ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளிக்கதிர் விழும் நிகழ்வு நடைபெற்றது.

சூரிய கதிர்கள் ராமர் சிலையின் நெற்றியில் விழும் வகையில் கோவில் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் இரண்டு, இரண்டரை நிமிடங்கள் நிகழ்வு நீடித்தது. சூரிய திலகத்தின் நீளம் சுமார் 58 மில்லி மீற்றர் வரை இருந்தது.

கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்களின் உதவியுடன் இந்த சூரிய திலகம் விழுவது சாத்தியப்படுத்தப்பட்டது.

இந்திய வான் இயற்பியல் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, ரூர்கியில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தின் விஞ்ஞானிகள் இந்தப் பொறியியல் முறையை உருவாக்கி உள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் ராம நவமி அன்று சூரிய கதிர்கள் ராமரின் நெற்றியில் விழும்படியாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. என்றாலும், சூரியனின் கோணங்களுக்கு ஏற்ப கண்ணாடி மற்றும் லென்ஸில் சிறிய மாற்றம் செய்ய வேண்டியது அவசியம்.

இதனிடையே, அயோத்தியில் ராமர் நெற்றியில் சூரிய ஒளி விழுந்த நிகழ்வை விமானப் பயணத்தில் ஈடுபட்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி தனது ரைப்பில் பார்த்து வழிபட்டுள்ளார்.

இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை அவர் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

# ஐக்கிய அரபு நாடுகளில் வரலாறு காணாத கனமழை

## விமான சேவைகள் பாதிப்பு






ஐக்கிய அரபு நாடுகளில் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்குஏற்பட்டுதுபாய்,ஷார்ஜா,அபுதாபிஉள்ளிட்டநகரங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதுடன், சாலைகளிலும் பெருக்கெடுத்து ஓடுவதால், போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகளும் தடைப்பட்டுள்ளது. மழை நீர் புகுந்துள்ளதாலும் கன மழை நீடிக்கும் என்பதாலும் துபாய்க்கு வரவிருந்த 100-க்கும் மேற்பட்ட விமானங்கள் திருப்பிவிடப்பட்டுள்ளன.

அங்கு கடந்த 75 ஆண்டுகளில் வரலாறு காணாத மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் கிழமை இரவு ஆரம்பித்த மழை தொடர்ந்து பெய்து வருவதுடன், மழை நீடிக்கும் என ஐக்கிய அரபு இராச்சிய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே, மேற்கு ஆசிய நாடான ஓமனில் கனமழை பெய்யும் என அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி அங்கு கடந்த சில நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழையால் முசாண்டம், அல் புரைமி, அல் தஹிரா மற்றும் அல் தகியா உள்ளிட்ட 5 மாகாணங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அனர்த்தங்களில் சிக்கி பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏராளமான மரங்கள் மற்றும் மின்கம்பங்களும் ஆங்காங்கே முறிந்து வீழ்ந்துள்ளன. இதன் காரணமாக அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஓமனில் இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்து கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் தலைநகர் மஸ்கட் உட்பட பல நகரங்களில் பாடசாலைகள், அலுவலகங்களுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளன.

# 2024 ஒலிம்பிக் விழா சுடர் ஏற்றப்பட்டது



2024 பாரிஸ் ஒலிம்பிக் விழாவிற்கான சுடர், புராதன ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்கத்தின் ஒலிம்பியா நகரில் ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தோமஸ் பக் உள்ளிட்ட பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நவீன ஒலிம்பிக் விழாவின் போது சுடரை பேரணியாக ஏந்திச்செல்லும் வழமை 1936ஆம் ஆண்டு, ஜேர்மனியின் பேர்லின் ஒலிம்பிக் விழாவின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் ஒவ்வொரு ஒலிம்பிக் விழா ஆரம்பமாவதற்கு முன்பும் கிரேக்கத்தில் ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டு, பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டு விழாவை நடத்தும் நாட்டிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த நிலையில், இவ்வாண்டுக்கான சுடரை கிரேக்கம் முழுவதும் 5,000 கிலோ மீற்றர்களுக்கு 11 நாள்களாக 600 பேர் ஏந்திச் செல்லவுள்ளனர்.

ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற கிரேக்கத்தின் ஸ்டெபனோஸ் ன்டோஸ்கோஸ் ஒலிம்பிக் சுடர் பவனியை ஆரம்பித்து வைத்துள்ளார்.

ஒலிம்பிக் சுடர் இம்மாதம் 26 ஆம் திகதி பிரான்ஸுக்கு கொண்டு செல்லப்பட்டு, பாரிஸ் ஒலிம்பிக் விழா ஏற்பாட்டுக் குழுவினரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

# சம்பந்தன் ‘பண்பாளர் அரசியல்’ செய்யப் போய் சிங்கள, முஸ்லிம் தரப்பினரால் ஏமாற்றப்பட்டார்

## பொது வேட்பாளரை நிறுத்துவதை வலியுறுத்தி நீதியரசர் விக்னேஸ்வரன் திரும்பவும் அறிக்கை




பொது வேட்பாளரை நிறுத்துவதே சிறந்த வழி. எல்லோரதும் எதிர்பார்ப்புக்களையும் அது பூர்த்தி செய்யும் என்று மீண்டும் தெரிவித்திருக்கும் யாழ் மாவட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், சம்பந்தன் “பண்பாளர் அரசியல்“ (Gentlemen Politics) செய்யப் போய் சிங்கள அரசியல்வாதிகளாலும் முஸ்லிம் அரசியல்வாதிகளலும் – இரு தரப்பினராலும் ஏமாற்றப்பட்டார் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் அனுப்பி வைத்த தமது “மாதத்திற்கொரு கேள்வி“ அறிக்கையில் நேற்று மேலதிகமாகக் கிடைத்த “கேள்விக்குப் பதில்” பகுதியிலேயே இது விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் முழு விவரம் வருமாறு:–

*கேள்வி :- நீங்கள் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்று கூறப்போய் அது பூதாகாரமாகத் தமிழ் மக்களிடையே பல முரண்பாடுகளைத் தோற்றியிருக்கின்றதே! அதை எப்படிப் பார்க்கின்றீர்கள்?*

பதில் :– (சிரிக்கிறார்) Much ado about nothinப என்று Shakespeare இன் நாடகம் ஒன்றுண்டு. இல்லாத முரண்பாடுகள் பற்றிய ஆரவாரம் என்று இதனைக் கூறலாம். என தருமைத் தமிழ் மக்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகின்றேன்.

ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது முரண்படுவதாகக் கூறப்படும் மற்றைய சகல கருத்துக்களையும் அது தன்னுள் அடக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதி சங்கரரின் குருவின் குருவாகிய கௌடபாதர் சத்தியம் அல்லது உண்மை பற்றி ஒன்றைக் கூறினார். அதாவது உண்மை என்பது ஆயிரம் முரண்பாடுகளையும் தன்னுள் அடக்கும் தன்மை வாய்ந்தது என்றார். தமிழ் மக்கள் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடுத்துவது மற்றைய முரண்பட்ட கருத்துக்களைத் தன்னுள் அடக்கும் தன்மை வாய்ந்ததாகும்!

அதெப்படி?

பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறக்கினால் அது ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாகும். ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற முன்வந்திருக்கும் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்காமல் இருப்பது பகிஷ்கரிப்பு தானே!

ஆனால் தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்து சிங்கள வேட்பாளர்களைப் புறக்கணிப்பது சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்கும் எமது தமிழ் மக்கள் தவறான வழிகளில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதைக் கட்டுப்படுத்தி பகிஷ்கரிப்பு பலமடைய வழிவகுக்கும். பகிஷ்கரித்தால் தேர்தல் வாக்கு நிலையங்களில் என்ன நடக்கின்றதென்பதை நாங்கள் அறியாமல் இருக்கச் செய்துவிடும். பொதுவேட்பாளர் ஒருவரை முன்நிறுத்தினால் அவரின் தேர்தல் முகவர்கள் தாம் பகிஷ்கரிக்கும் வேட்பாளர்களுக்குத் தவறான வழிகளில் வாக்களிப்பதை நிறுத்தி பகிஷ்கரிப்பை வலுவாக்க உதவுவர். நாம் தேர்தலை வெறுமனே பகிஷ்கரித்தோமானால் தம்பி கஜேந்திரகுமார் அவர்களின் வாக்கையும் என் வாக்கையும் யாரோ சிலர் தமக்கு சாதமாக சிங்கள வேட்பாளர்களுக்காகப் பாவிக்க வழிவகுத்துவிடும். ஆகவே பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிப்பது பகிஷ்கரிப்பதின் வெற்றியை உணர்த்தும் உச்சக் கட்டமாகக் கொள்ளலாம்.

அடுத்து சிங்கள வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிப்பதே சிறந்தது என்ற வாதம். தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது என்பது தகுதியுடைய சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்காது விடுதல் என்று அர்த்தமாகாது. ஆனால் சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வெறுமனே வாக்களித்து விட்டுப் பின்னர் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக நாம் ஏமாற்றப்பட்டவாறு நடக்காது இருப்பதற்கு தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது கூடிய வலுவுள்ளதாக அமையும். அதாவது சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களியுங்கள் என்று கூறுபவர்கள் குறித்த சிங்கள வேட்பாளரிடம் இருந்து எந்தவித வாக்குறுதிகளையும் பெறாது வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு வாக்களிக்கக் கூறுவதாகும். திரு.சம்பந்தன் அவர்கள் செய்த தவறு அது தான். சிங்கள அரசியல்வாதிகளை நாம் நம்புவோம், முஸ்லீம் அரசியல்வாதிகளை நாம் நம்புவோம் என்று “பண்பாளர் அரசியல்” (Gentlemen Politics) அவர் செய்யப் போய் இருவராலும் ஏமாற்

தொடர்ச்சி ▼

# சம்பந்தன் 'பண்பாளர் அரசியல்' செய்யப் போய் சிங்கள, முஸ்லிம் தரப்பினரால் ஏமாற்றப்பட்டார்

தொடர்ச்சி ▲

றப்பட்டார். அவரது 91 ஆவது வயதில் நான் அவரைத் தாக்குகின்றேன் என்று எவரும் என்னுடன் குறைப்பட்டுக் கொள்ளக்கூடாது. திரு.சம்பந்தன் அவர்கள் "பண்பாளர் அரசியலில்" ஈடுபட்டமை அவரின் பெருந்தன்மை யையும் சூதற்ற மனோநிலையை யும் வெளிக்காட்டுகின்றது. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. திருகோணமலையையும் இலங்கை யின் கிழக்கையும் நாம் இழந்து இன்று பரிதவிப்பதற்குக் காரணம் இந்த "பண்பாளர் அரசியலே". பெரும்பான் மைத் தமிழர்கள் சிறுபான்மையின முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க விட்டோம். அவர் தமது மக்களுக்கு சார்பாக நடந்து கொண்டார். நாம் பாதிக்கப்பட்டோம்.

நல்லாட்சி காலத்தில் சிங்கள அரசியல்வாதிகளுடன் சேர்ந்து அர சியல் நடத்தினால் – அதுவும் "பண் பாளர் அரசியல்" நடத்தினால் – தாம் முன்வைக்கும் நியாயமான கோரிக் கைகளுக்கு சிங்கள அரசியல் வாதிகள் செவிசாய்ப்பார்கள் என்று திரு.சம்பந்தன் அவர்கள் ஆணித் தரமாக நம்பினார். ஆனால் அது நடைபெறவில்லை.

ஒருமுறை இராமகிருஷ்ண பரம ஹம்சர் நதியில் குளித்துக் கொண் டிருக்கும் போது ஒரு விஷ ஜந்து தண்ணீரில் மிதந்து வந்தது. அதனை அவர் தன்கைகளால் எடுத்து கரை சேர்ப்பித்தார். உடனே அது அவரின் கைகளைக் கடித்துவிட்டது. அதனால் அவர் தன்னுடைய கைகளை உதற அந்த ஜந்து திரும்பவும் தண்ணீரில் விழுந்துவிட்டது. திரும்பவும் அவர் அந்த ஜந்தை தன் கைகளால் வாரி எடுத்து கரை சேர்ப்பித்தார்.

அப்பொழுது அருகில் இருந்தவர் பரமஹம்சரிடம் "அந்த விஷ ஜந்து உங்களைக் கொட்டும் என்று தெரிந்து கொண்டு ஏன் திரும்பவும் அதனைக் காப்பாற்றினீர்கள்?" என்று கேட்டார். "கொட்டுவது அதன் குணம் கருணை காட்டுவது மனித குணம்" என்றார் பரமஹம்சர்.

"பண்பாளர் அரசியல்" அது போன்றதே. திரு.சம்பந்தனை நான் குறை சொல்லவில்லை. அவர் பண் பாளராக நடந்து கொண்டார். ஆனால் நடந்ததோ நாம் தமிழர்கள் யாவரும் கொட்டப்பட்டுவிட்டோம். விஷ ஜந் துக்கள் தமது குணத்தைக் காட்டி விட்டன.

ஆகவே பொது வேட்பாளரை முன்னிறுத்தினால் நாம் சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேச முடியும் என்பதை நாம் மறத்தலாகாது. எங்க ளின் கால்சட்டைப் பைகளை நிரப்பும் பேரம் அல்ல. தமிழ் மக்கள் சார்பான பேரம்! (அதனால்த்தான் பொது வேட்பாளராக நேர்மை நிறைந்த ஒருவரை முன்னிறுத்துவது அவசி யம்.) தமிழ்ப் பொது வேட்பாளர், மற் றைய சிங்கள வேட்பாளர்கள் சம மதம் தெரிவிக்கும் தீர்வுகளைப் பரி சீலித்துப் பார்த்து யார் கூடிய நன்மை களைப் பெற்றுத் தருவாரோ அவருக்கு விருப்பு வாக்கொன்றை வழங்க முன்வரலாம். அதாவது தமிழ் வேட் பாளருக்கு முதல் விருப்பு வாக்கு. சிங்கள வேட்பாளருள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முன்வருபவருக்கு அடுத்த விருப்பு வாக்கு. ஆனால் இங்கு "பண்பாளர் அரசியலுக்கு" இடமில்லை. தமிழர் களுக்கு தக்க தீர்வைத் தர முன் வருபவர்கள் வெளிப்படையாக இதைச் செய்வேன் என்று வெளிநாட்டு இராஜ தந்திரிகள் மூன்று பேர் முன்னி லையில் கையெழுத்திட்டு ஆவணம் ஒன்றைத் தரவேண்டும். வாய்மொழி மூல உத்தரவாதங்களை நாம் ஏற்க முடியாது. எமக்கு எழுத்தில் இட்டு அதன் பிரகாரம் தீர்வுகளைத் தர முடியாதவர்கள், தாம் வென்ற பின் எதனையுந் தருவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மூவருமே அல்லது அத்தனை சிங்கள வேட்பாளர்களுமே எழுத்தில் தர முடியாது என்று கூறினால் தான் தோன்றித்தனமாக ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதே சிறந்தது என்று கூறுபவர்கள் தமது கூற்றின் தாற் பரியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் வாக்களிப்பதால் அவர்கள் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஏதாவது உதவி வேண்டும் என்றால் அதைச் செய்து தருவார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு எதனை யும் பெற்றுத் தரமாட்டார்கள் என்பது அவர்கள் எழுத்தில் உத்தரவாதங் களைத் தர மறுப்பதில் இருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே குறித்த ஒருவருக்கு வாக்க ளிக்க வேண்டும் என்று கூறுபவர் களும் அவர்களின் தேர்வான சிங்கள வேட்பாளரின் உண்மைத் தன்மையை தமிழ் பொது வேட்பாளரை முன் னிறுத்துவதால் புரிந்து கொள்ளலாம். நாம் அவர்களிடம் கோர வேண்டிய கோரிக்கைகள் பின்வருமாறு –

1. வடக்கு கிழக்கில் தமிழ்மொழி 3000 வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது.
2. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள்.
3. அவர்கள் சர்வதேச உடன்படிக் கைகளின் அடிப்படையில் உள் ளார்ந்த சுயாட்சியைபெற தகுதி யுடையவர்கள்.
4. அவர்கள் ஒரு கூட்டு சமஷ்டி அர சியல் யாப்பைப் பெற உரித்து டையவர்கள்.
5. ஒற்றையாட்சி அரசியல் யாப்பை நீக்கி ஒரு கூட்டு சமஷ்டி அரசி யல் யாப்பை இலங்கை நாடு ஏற்றுக் கொள்ள சம்மதிக்க வேண் டும்.

அடுத்து இனக்கலவரம் வெடிக் கும் என்ற பயம். பகிஷ்கரித்தால் அது வெடிக்கக்கூடும் என்ற பயம். யாராவது ஒருவரை நாம் தேர்ந்தெடுத்து அவருக்கு வாக்களித்தால் மற்றைய வேட்பாளர்களின் ஆதரவாளர்களுடன் நாம் முரண்டுபிடிக்க நேரிடலாம். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் பொது வேட்பாளர் ஒரு வரை நிறுத்துவதால் அவ்வாறான கலகங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. நாங்கள் தெளிவாகக் கூறுவோம் – எந்த சிங்கள வேட்பாளர் தமிழர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய முன் வருவாரோ அவருக்கு விருப்பு வாக்கொன்றை அளிப்போம் என்று.

அதையும் மீறி மீண்டும் ஓர் இனக் கலவரம் வர வாய்ப்பே இல்லை. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை அதற்கு இடங்கொடுக் காது. வட கிழக்கில் இராணுவத்தினர் தவறாக நடந்து கொண்டால் அதுவே வெளிநாடுகளில் எமது போராட்டத் திற்கு அனுசரணையாளர்களைப் பெற்றுத்தர வல்லது என்பது எனது அனுமானம். தற்போதைய பொருளா தார நிலை இனக் கலவரங்களை ஏற்படுத்த இடங்கொடுக்காது. அத்து டன் உயிர்த்த ஞாயிறின் பின்னர் சிங்கள இளைஞர் யுவதிகள் எவ்வாறு சிங்கள அரசியல்வாதிகள் இனத்தை யும் மதத்தையும் பாவித்து இதுகாறும் அரசியல் நடத்தி வந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுள்ளார்கள். இனக்கலவரங்களுக்கு அவர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள். மேலும் "அரகலய" அவர்களிடையே பாரிய மனோமாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளது.

எனவே பொது வேட்பாளரை நிறுத்துவதே சிறந்த வழி. எல்லோர தும் எதிர்பார்ப்புக்களையும் அது பூர்த்தி செய்யும். – என்று உள்ளது.



# கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியமை மன்னிக்கவே முடியாத வரலாற்றுத் தவறு

## நெல்லை பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி காட்டம்

கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியமை மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறு என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களவைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், தமிழகம் – நெல்லையில் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

“தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டணி எவ்வளவு தேச விரோதச் செயல்களை செய்துள்ளது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நாட்டு மக்கள் அனைவருக்கும் இதன் உண்மைத் தன்மை தெரியும்.

இவ்விரு கட்சியினரும் தமிழ் நாட்டின் உயிர் நாடியான கச்சத்தீவை துண்டித்து வேறு ஒரு நாட்டிற்கு கொடுத்துள்ளனர். திரைமறைவில் செய்த இந்த வரலாற்றுப் பிழையை ஒருபோதும் மன்னிக்கவே முடியாது.

இந்த வரலாற்றுப் பிழையை மன்னிக்கவே முடியாத பாவமாகவும் நான் கருதுகின்றேன். இது தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டணி செய்த தேசத் துரோக செயலாகும்.

அவர்கள் செய்த பாவத்திற்காக தமிழக மீனவர்களே தண்டிக்கப்படுகின்றனர்.

பல தலைமுறையாக பயன்படுத்தி வந்த இடத்தை தாரை வார்த்ததை பா.ஜ.க. ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியுள்ளது” என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கச்சத்தீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று கூறி மோடி அரசு அதனை தேர்தல் பிரசாரமாக பயன்படுத்தியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவில் பொதுத் தேர்தலை குறிவைத்து மோடி அரசு இதுபோன்ற அறிக்கையை வெளியிட்டாலும், கச்சத்தீவு இந்தியாவுக்கு வழங்கப்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நெடுந்தீவில் மதுபானசாலைக்கு அனுமதி ஆட்சேபித்து ஆர்ப்பாடத்துக்கு முஸ்தீபு!

( ந.லோகதயாளன் )

பொது அமைப்புக்களின் எதிர்ப்பையும் மீறி நெடுந்தீவில் மதுபான சாலைக்கு அனுமதி

அளித்தமைக்கு எதிராக திங்கள் கிழமை நெடுந்தீவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த – லண்டனில் வசிக்கும் – ஒருவருக்கு உடனடியாக இந்த அனுமதி தற்போது வழங்கப்படுவதனை எதிர்த்தே எதிர்வரும் திங்கள் கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகம் முனபாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தின் பொது அமைப்புக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் ஜே-05 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள விடுதியிலேயே இந்த மதுப் பாவனைக்கான அனுமதி வழங்கப்படவுள்ளது. அதை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# பிரதான சூத்திரதாரியை சட்டத்தின் முன்னால் நிறுத்துவதாக தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளை உருவாக்கி இனவாதக் கலவரங்களை ஏற்படுத்தி, உயிர் மற்றும் உடைமைச் சேதங்களை ஏற்படுத்தி, குறுகிய அரசியல் இலக்கை அடைவதற்காக குழுவொன்று மேற்கொண்ட ஓர் சதி என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி மற்றும் தாக்குதலை திட்டமிட்டவர்களை சட்டத்திற்கு முன்னால் நிறுத்துவதே தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் முதன்மை நடவடிக்கை என அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காக உறுதிமொழி வழங்கும் வகையில் நேற்று அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதம செயலாளர் மருத்துவர் நிஹால் அபேசிங்கவின் கையொப்பத்துடன் இந்த உறுதி மொழி நேற்று வெளியிடப்பட்டது.

முழுமையான நீதிமன்ற அதிகாரத்துடன், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, மிகவும் குறுகிய காலப் பகுதிக்குள் தாக்குதலை நடத்துவதற்கு சூழ்ச்சி செய்தோர் மற்றும் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவும் பின்வாங்கப் போவதில்லை என தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி நேற்று ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து தமது உறுதிமொழி தொடர்பில் தெளிவு படுத்தியது.



# தமிதா, கணவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுய் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

கொரியாவில் தொழில் பெற்றுத்தருவார்கள் எனக் கூறி 30 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதி மோசடி செய்துள்ளனர் என்ச்க் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் இருவரும் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.



# குறுந்தகவல் ஊடான மோசடிகள் அதிகரிப்பு

### தபால் திணைக்களம் அறிவுறுத்தல்

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருந்து பொதிகள் கிடைத்துள்ளன என தெரிவித்து குறுந்தகவல் ஊடாக வாடிக்கையாளர்களின் கடனட்டை தொடர்பான தகவல்களை பெறும் மோசடி குறித்து அவதானமான இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடி சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போலி இணையத்தளம், போலி தொலைபேசி இலக்கங்கள் மூலம் இந்த மோசடி இடம்பெறுவதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தபால் திணைக்களத்தினை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் இவ்வாறான மோசடிகளில் சிக்க வேண்டாம் என திணைக்களம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தபால் திணைக்களமானது, கடன் அட்டைகள் தொடர்பில் குறுஞ்செய்திகள் மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையிலும் தகவல்களை பெற்றுக்கொள்வதில்லை என தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# 15 இலங்கை மீனவர்களுக்கு மியன்மாரில் பொது மன்னிப்பு



மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 15 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் பொது மன்னிப்பு தினத்தையொட்டி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மியன்மார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 15 இலங்கை மீனவர்கள் கடந்த டிசம்பர் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், மேற்படி இலங்கை மீனவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு மியன்மார் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் அந்நாட்டு பிரதமர் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார் என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜானக பண்டார தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்டவர்கள் இன்னும் சில நாள்களில் இலங்கைக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாலித்த தெவரப்பெருமவின் பூதவுடல் நாளை நல்லடக்கம்

முன்னாள் இராஜாங்க அமைச்சர், காலஞ்சென்ற பாலித்த தெவரப்பெருமவின் பூதவுடல் நேற்று இரவு மத்துகமயில் உள்ள அன்னாரது வீட்டிற்கு கொண்டுசெல்லப்பட்டது. அவரது உடல் நாளை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பாலித்த தெவரப்பெரும, மத்துகம – நவத்துடுவ பிரதேசத்திலுள்ள அவருக்கு சொந்தமான தோட்டத்தில் வைத்து மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.



அன்னாரின் மரணச்செய்தியை அறிந்த பெருந்திரளானவர்கள், நேற்று முன்தினம் நாகொடை வைத்திய சாலையில் ஒன்றுகூடினர்.

மத்துகம மேலதிக நீதவான் மற்றும் களுத்துறை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர், மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மின்சாரம் தாக்கியமையால், உடலின் உள் உறுப்புகள் சேதமடைந்தமை உயிரிழப்பிற்கு காரணம் என பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

# இறையாண்மைப் பத்திர மறுசீரமைப்பு தொடர்பில் தெளிவுபடுத்தி நிதி அமைச்சு அறிக்கை வெளியீடு

இலங்கை திருப்பிச் செலுத்தாத இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பாக இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை தெளிவுபடுத்தி நிதி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின் செயல்திறன் அடிப்படையில் இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைக்க கடன் வழங்குநர்கள் முன்மொழிந்துள்ளனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை தரப்பினர் கடன் இரத்து தொடர்பாக மார்ச் மாதம் முன்வைத்த பிரேரணைக்கு இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்கள் உடன்படவில்லை.

தமது கடன்களின் 28 வீதத்தை குறைத்தல் உள்ளிட்ட யோசனைகளை இலங்கை அரசாங்கம் பிணை முறி உரிமையாளர்களிடம் முன்வைத்திருந்தது.

மேற்படி யோசனைகளை நிராகரித்துள்ள பிணை முறி உரிமையாளர்கள், மேலதிக வட்டியுடன் குறித்த பிணை முறிகளை மீள விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய, தற்போது இலங்கை செலுத்த வேண்டிய 12.55 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகைக்காக மேலதிகமாக 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை செலுத்த நேரிடும்.

எவ்வாறாயினும், இலங்கையினால் பிணை முறி உரிமையாளர்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள், சர்வதேச நாணய நிதிய விதிமுறைகளுடன் இணங்கிச் செல்வதுடன், பிணை முறி உரிமையாளர்களின் யோசனைகள் குறித்த விதிமுறைகளுக்குப் புறம்பாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக, கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சு.கவின் புதிய நியமனங்களுக்கு எதிராக ஆட்சேபனை முன்வைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில், கட்சியின் பதில் பொதுச் செயலாளரால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சி யாப்பிற்கமையவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சுட்டிக்காட்டியுள்ளதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல். ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர், சட்டத்தரணியூடாக தமது ஆட்சேபனையை முன்வைத்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

இன்று இடம்பெறவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தின் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பிலும் அதற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனை தொடர்பிலும் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



# சாதாரண தர பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் அடுத்த வாரம் இடம்பெறும்

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தபாலினூடாக பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை பரீட்சைக்கு 452,979 பேர் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.04.2024



**மேஷம்**

இன்று வெற்றிபெற தொடர் முயற்சி எடுக்க வேண்டும். இன்று செயல்களை நம்பிக்கையுடன் ஆற்றுங்கள். பதட்டத்தை கட்டுப்படுத்துங்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களை சுறுசுறுப்பாக வைக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் எளிதில் ஆற்ற இயலாது. கீழ் பணிபுரிபவர்களால் பிரச்சினை ஏற்படும். பணிச் சுமை அதிகமாக இருக்கும்.

உணர்ச்சிகளை கட்டுபடுத்த கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்கள் ஆரோக்கியம் குறைந்து காணப்படும். முதுகுவலி மற்றும் செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும்.



**ரிஷபம்**

இன்று வெற்றியைக் காண பொறுமை யாக இருக்க வேண்டும். செய்யும் செயலில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

பதற்றமாக இருப்பதாக உணர்வீர்கள். உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியின்மையைக் காண்பீர்கள். புரிந்துனர்வின்மையே இதற்கு காரணம். அவர் கருத்துக்கும் இடம் அளித்தால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளலாம்.

இன்று செழிப்பான நாளாக காணப்படாது. அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்புங்கள். பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.



**மிதுனம்**

குடும்பத்துக்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று நம்பிக்கையுடன் இருங்கள். சிறந்த வளர்ச்சி சாத்தியம்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும்.பணியில் வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். அதனை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

அமைதியாக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கலாம்.நீங்கள் அதிக உற்சாகத்துடன் இருப்பீர்கள்.



**கடகம்**

இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும் உங்களிடத்தில் இன்று தெளிவு இருக்காது அதனால் தவறான முடிவுகள் எடுக்க வாய்ப்பு உள்ளது.

நீங்கள் இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பண வரவு சுமாராக காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

சளி இருமல் போன்ற பாதிப்பு இருக்கும். குளிர்ச்சியான உணவுகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.



**சிம்மம்**

ஆன்மீக ஈடுபாடு மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம். பிரார்த்தனை மற்றும் தியானம் மகிழ்ச்சி அளிக்கும். மனதில் உற்சாகமாகவும் முகத்தில் புன்னகை யுடனும் இருங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பணியின் போது கவனம் சிதறாமல் இருக்க மனதை ஒருமித்து பணியாற்றுங்கள்.

மனதில் தோன்றும் குழப்பங்கள் காரணமாக உறவில் அதிருப்தி காண்பீர்கள். நீங்கள் உங்கள் துணை யுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். பணத்தை கவனமுடன் கையாளவும்.

இன்று மனதில் குழப்பம் காணப்படும்.



**கன்னி**

இன்று பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்களின் நன் மதிப்பை பெற வேண்டும். தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எளிதாகப் பணியாற்ற மனதை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் காணப்படும். நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும்.

பண வரவிற்கு இது உகந்த நாள் அல்ல. பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும். பண இழப்புக் கான வாய்ப்பும் உள்ளது.

உணவை சரியான நேரத்தில் உண்ண வேண்டும். அதிகமாக நீரைப் பருக வேண்டும். நடைப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.



**துலாம்**

இன்று வெற்றிக்கு உகந்த நாள். விரைவாக செயலாற்ற உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் ஆற்றலை வெளிக்கொணரும் திறமை உங்களிடம் காணப்படும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப் பீர்கள். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான போக்கு கொண்டு இனிமையான வார்த்தைகளைப் பேசுங்கள். இதனால் உங்கள் முகத்தில் புன்னகையும் உற்சாகமும் காணப்படும்.

இன்று நிதிநிலை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் மனதில் நம்பிக்கை காணப்படும்.

இன்று நலமாக இருப்பீர்கள். திடமான ஆரோக்கியம் கொண்டிருப்பீர்கள்.



**விருச்சிகம்**

இன்று சிறப்பான நாளாக இருக்கும். நீங்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் உங்கள் செயல்களைச் செய்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கிய தொடர்பு உடையவர்களிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

உங்கள் சக ஊழியர்களின் ஆதரவு உங்களை கடினமாக உழைக்க வைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக இருக்கும். உங்கள் துணையுடன் நட்பாக பழகுவீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் கிடைக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

நம்பிக்கையான உணர்வுகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.04.2024




இன்று சுமாரான பலன்கள் கிடைக்கும் நாள். நீங்கள் அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். சகஜமான அணுகுமுறை வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். அறிவார்ந்த திட்டங்கள் மூலம் இது சாத்தியம்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வின்மையே இதற்கு காரணம். பொறுமையாக இருங்கள்.

இன்று வரவை விட செலவு அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காணப்படும். பணத்தின் தேவை இருக்கும்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சாதகமான நாளாக அமையும். உங்கள் வாழ்விற்கான பயனுள்ள முடிவுகளை எடுக்க உகந்த நாள். உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். பணிகளை நீங்கள் கையாளும் திறன் மூலம் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை கவர்வீர்கள்.

இன்றைய நாள் உங்கள் துணையுடன் மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவரும் புதிய விருந்தினரின் வருகைக்கு காத்திருப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். சில பயனுள்ள முதலீடுகளை நீங்கள் தேர்வு செய்யலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று செயல்கள் உங்கள் விருப்பம் போல நடக்காது. நேர்மறை எண்ணம் கொண்டு செயல்படுவது நல்லது. தன்னம்பிக்கையோடு உங்கள் இலக்கில் கவனம் செலுத்த வேண்டும். தனிமையாக இருப்பது போன்று உணர்வீர்கள். ஆனால் இதுவும் கடந்து போகும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டால் குறித்த நேரத்தில் முடிக்கலாம். நீங்கள் கவனமுடன் இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களைக் காண்பீர்கள். உங்கள் பிரியமானவரின் வார்த்தைகளைக் கேட்பது நல்லது.

செலவுகள் அதிகமாக காணப்படும். பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் இன்று தைரியமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சி நல்ல பலன்களை அளிக்கும். பயணங்களுக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். இன்று உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இன்று அதிக தன்னம்பிக்கை காணப்படும்.

உங்கள் துணையின் நன்மதிப்பை பெற இன்று உகந்த நாள். உங்கள் இருவருக்கும் இது சிறப்பான நாள்.

இன்று பணபுழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.

நீங்கள் இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

